6th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். பொதுத் தேர்தலுக்குள்ளாக வார்டுகளைப் பிரிப்பதா என்பது ஒரு பிரச்சினை. அதைப்பற்றி முடிவு செய்யவேண்டும். இப்பொழுதிருக்கிற ஜாப்தாக்களை வைத்துக்கொண்டே தேர்தல் நடத்துவதா என்பது மற்றொரு பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கவேண்டியிருப்பதால்தான் தாமதம் இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே வார்டுகள் பிரிக்கப்பட்டிருக்கிற சென்னை மாநகராட்சிக்காவது துரிதமாகத் தேர்தலை நடத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(பதில் இல்லை)

திரு. மீ. கலியாணசுந்தரம் : இவ்வளவு காலம் கழித்து தேர்தல் நடக்க இருப்பதாலும், முடிவு எடுக்கப்படுதற்குக் கால தாமதம் ஆவதாலும், நகரசபை வார்டுகளை அதிகப்படுத்தும் யோசனைப் பற்றி துரிதமாக முடிவு எடுக்கப்படுமா? குறிப்பாக, பொதுத் தேர்தலுக்கு முன்பாகவே முடிவு எடுக்கப்படுமா ?

(பதில் இல்லை)

உணவு உற்பத்தி (இசையை பயன்படுத்தல்)

* 2 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு உற்பத்தியைப் பெருக்க இசையைப் பயன்படுத்தும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவர உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இசையின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க அரசாங்கத்திடம் தற்சமயம் திட்டமேதுமில்லை. ஆயினும் இசை அப்பியாசங்கள் மூலம் விளைச்சல் பெருகக்கூடிய முகாந்திரம் இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதையொட்டி, கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் இவ்விஷயமாக சிறு அளவில் ஒரு பரிசோதனையை மேற்கொள்ளும் திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : கோவையில் நடைபெற்ற ஆராய்ச்சியின் மூலம் கண்ட முடிவை இந்த மன்றத்திற்கு அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆராய்ச்சிக்கே இப்பொழுதுதான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே எப்படி முடிவு எடுப்பது ?

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, அகில இந்தியாவில் மற்ற எந்த மாகாணத்திலாவது இதுபோன்று இசை மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதுபற்றி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : புதுச்சேரியில் மட்டும் அதுபற்றிப் பரிசீலனை செய்திருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : இந்த ஆராய்ச்சி சம்பந்தமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருக்கும் தாவர ஆராய்ச்சி நிபுணர் திரு. சிங் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு ரிபோர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது. அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.

Assembly seats

* 3 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any representation was made on behalf of the Government to the Delimitation Commission regarding the strength of the Assembly seats; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The State Government have suggested to the Delimitation Commission that the number of seats to be assigned to the Legislative Assembly of this State might be 234, adopting the integral multiple 6.

(அ) & (இ) இம்மாநிலச் சட்ட சபைக்காக ஒதுக்க வேண்டிய ஸ்தானங்கள், லோக் சபையில் இம்மாநிலத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்களின் எண்ணிக்கையைப்போல் ஆறு மடங்கு இருக்க வேண்டுமென இம்மாநில அரசினர் தேர்தல் தொகுதி நிர்ணயக் கமிஷனிடம் கருத்து தெரிவித்துள்ளனர்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இன்னும் பெரிய ராஜ்யங்களில் ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கு ஏழு சட்டசபைத் தொகுதி என்று இருக்கிறபோது நம் ராஜ்யத்தில் மட்டும் ஆறு என்று நிர்ணயிக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போதே கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அப்போதும் அதுபற்றிக் குறிப்பிட்டேன். எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்த பிறகுதான் ஆறு தொகுதி என்று முடிவு செய்யப்பட்டது. டீலிமிடேஷன் குழுவினரும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.